# ஸ்ரீசாய்ராம் கல்லூரி மாணவர்களின் சோலார் ஹீட்டர் கண்டுபிடிப்புக்கு முதல் பரிசு



நவீன சோலார் ஹீட்டர் கண்டுபிடித்த மாணவர்கள் டி.ஆர். விஜய்பிரவீண், ஆர். பிரபாகரன், ஆர். சுகுமாருக்கு ரொக்கப் பரிசு வழங்கிய ஸ்ரீசாய்ராம் கல்வி குழுமத் தலைவர் லியோமுத்து. உடன், (இடமிருந்து) கல்லூரி முதல்வர் சி.வி. ஜெயகுமார், தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து, இயந்திரவியல் துறைத் தலைவர் ஏ. ராஜேந்திரபிரசாத்.

**தாம்பரம், ஜூன் 29:** சூரிய சக்தியால் இயங்கக்கூடிய இரவிலும் கொதிநீரை சேமிக்கும் திறன் கொண்ட நவீன சோலார் ஹீட்டரை உருவாக்கிய சென்னை ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி மாணவர்களின் கண்டுபிடிப்புக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. சாதனை படைத்த இயந்திரவியல் துறை மாணவர்களுக்கு கல்லூரித் தலைவர் லியோமுத்து ரொக்கப்பரிசு வழங்கினார். மாணவர்களை செய்தியாளர்களுக்கு அறிமுகப்படுத்தி,அவர் கூறியதாவது, ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் இயந்திரவியல் பிரிவில் படிக்கும் மாணவர்கள் பி.ஆர்.விஜய் பிரிதிவ், ஆர்.பிரபாகரன் மற்றும் ஆர்.சுகுமார் ஆகியோர் சூரிய ஒளியில் இயங்கக்கூடிய நவீன சோலார் ஹீட்டரை கண்டுபிடித்துள்ளனர். இந்த சோலார் ஹீட்டரானது, வெப்பத்திறனை அதிகரித்து,தண்ணீரை நீண்டநேரம் வெப்பத்துடன் வைத்திருக்கும் திறன் கொண்டது.

அண்மையில் சென்னை வர்த்தக மையத்தில், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் சார்பில், பொறியியல் கல்லூரி மாணவர்களின் கண்டுபிடிப்புக் கண்காட்சி நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில், மெட்ராஸ் ஐஐடி உள்பட 300க்கும் மேற்பட்ட கல்லூரிகள் பங்கேற்றன.

இதில், ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி மாணவர்களின் நவீன சோலார் ஹீட்டர் கண்டுபிடிப்புக்கு முதல் பரிசு கிடைத்தது. இரண்டாம் பரிசை, மெட்ராஸ் ஐஐடியும், மூன்றாம் பரிசை, கோவையைச் சேர்ந்த ஈஸ்வர் பொறியியல் கல்லூரி மாணவர்களும் பெற்றுள்ளனர்.முதல் பரிசு பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

சோலார் ஹீட்டரை உருவாக்கிய மாணவர்கள் கூறியதாவது, நாங்கள் உருவாக்கி இருக்கும் சோலார் ஹீட்டர் மற்ற சோலார் ஹீட்டர்களைவிட அதிக அளவில், 85 டிகிரியில் தண்ணீர் சூடுபடுத்த முடியும். மற்ற சோலார் ஹீட்டர்களைவிட 20 சதவீதம் அதிகமாக தண்ணீர் சூடுபடுத்தும் திறன் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் மற்ற ஹீட்டர்களில் 24 மணிநேரம் தண்ணீர் சூடாக இருக்கும் பட்சத்தில், எங்கள் சோலார் ஹீட்டரில் 30 மணிநேரம் வரைக்கும் தண்ணீர் சூடாக இருக்கும். இந்தக் கொதிகலனில், சுமார் 70 லிட்டர் வரை தண்ணீர் சேமித்து வைத்துக் கொள்ள முடியும் என்று கூறினர்.

நவீன சோலார் ஹீட்டரை கண்டுபிடித்த மாணவர்களுக்கு, ஸ்ரீசாய்ராம் கல்விக்குழுமத் தலைவர் லியோ முத்து, பத்தாயிரம் ரூபாயை ஊக்கத்தொகையாக வழங்கினார்.

சாய்ராம் கல்விக்குழு தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ், பொறியியல் கல்லூரி முதல்வர் ஜெயக்குமார் மற்றும் இயந்திரவியல் துறைத் தலைவர் ராஜேந்திர பிரசாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.